<u>சுருக்கம்</u>

பள்ளிக்கல்வி – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அறிவிப்பு – 2448 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சுத்தமான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஏற்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக் கல்வி (பொது1(1)த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.168

நாள் 09.08.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
ஆடி 24

படிக்க:

1 அரசாணை (நிலை) எண்.72 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1) துறை நாள் 31.05.2018.

2 பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.34717/என்2/இ2/ 2018, நாள் 19.06.2018.

-----

<u>ஆணை:–</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டபேரவையில் 01.06.2018 அன்று 110 விதியின்படி கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

> “பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதி அனைத்து பள்ளிகளிலும் குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது மாணாக்கர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலாக குடிநீர் வசதிகள் தேவைப்படும் 2448 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 48 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் சுத்தமான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்’’.

2. முன்னதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 19.4.2018 அன்று பள்ளிக் கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக் கூட்டத்தின் நடவடிக்கைக் குறிப்பில் கீழ்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:–

> ‘‘அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் குடிநீர் வசதிகளை அளித்திட சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூ.20 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்திட மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தும்பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு கடிதம் அனுப்பப்பட வேண்டும். பள்ளிக் கல்வி இயக்குநர், பள்ளிகளின் பட்டியலை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.’’

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவது தொடர்பாக பள்ளிக் கல்வி இயக்குநர் மேலே 2ல் படிக்கப்பட்ட கடிதத்தில், குடிநீர் சுத்திகரிக்கும் கருவியின் மூலம் (Reverse Osmosis Plant) பள்ளிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில்

உள்ள நீரை சுத்திகரித்து மாணவர்களுக்கு வழங்கலாம் என்றும், ஒரு குடிநீர் சுத்திகரிப்பு கருவியின் தோராய விலை ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) என்றும், ஒரு பள்ளிக்கு ஒரு குடிநீர் சுத்திகரிப்பு கருவி வீதம் 2448 பள்ளிகளுக்கு ரூ.48,96,00,000/– ஆகும் எனவும், இச்செலவினத்தை அந்தந்த பகுதிகளில் உள்ள சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வாயிலாக இப்பணிகள் செய்து முடிப்பதற்கு ஏதுவாக அரசாணை வழங்கிடுமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2018–19 ஆம் ஆண்டுக்கு வரையறுக்கப்பட்ட கூறு நிதியின் கீழ் பள்ளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் அமைத்திட தொகுதி ஒன்றுக்கு ரூ.15.00 இலட்சம் வீதம் மொத்தம் 234 தொகுதிகளுக்கு ரூ.35.10 கோடியும் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் வரையறுக்கப்படாத கூறு நிதிகள் கீழ் ரூ.1.00 கோடி நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க குடிநீர் வசதிகள் தேவைப்படும் 2448 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் குடிநீர் வசதிகள் ஏற்படுத்துவதற்கு அளிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, பின்வரும் நடவடிக்கைகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் மேற்கொள்ள நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

I. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க குடிநீர் வசதியில்லாத 2448 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் குடிநீர் சுத்திகரிக்கும் கருவி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் கொடுப்பதற்கு ஒரு பள்ளிக்கு ஒரு சுத்திகரிப்பு கருவி வீதம் 2448 பள்ளிகளுக்கு ஆகும் செலவினத்தை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும்.

II. அதன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்துவதற்கு 2018–19 ஆண்டுக்கு நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்பளித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.72, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி–1)துறை, நாள் 31.05.2018ன்படி, வரையறுக்கப்பட்ட கூறு நிதியின் கீழ் பள்ளிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் அமைத்திட தொகுதி ஒன்றுக்கு ரூ.15.00 இலட்சம் வீதம் மொத்தம் 234 தொகுதிகளுக்கான ரூ.35.10 கோடி நிதி ஒதுக்கீட்டின் கீழ் இப்பள்ளிகளுக்கு குடிநீர் சுத்திகரிக்கும் கருவி மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும். மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட வரையறுக்கப்படாத கூறு நிதியின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கப்படும் ரூ.1.00 கோடியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இப்பணிகளை நிறைவேற்ற மாவட்ட ஆட்சியர்கள் கருதலாம்.

II. அவ்வாறு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து குடிநீர் வசதி அளிக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்ட பள்ளிகள் போக மீதமுள்ள பள்ளிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செயல்படுத்த உண்டான சாத்தியகூறுகள் பற்றி ஆய்வு செய்து மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

III. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து செலவினம்

மேற்கொண்டது போக இறுதியாக மீதமுள்ள பள்ளிகள் ஏதும் இருப்பின் அச்செலவினத்திற்கான நிதி ஒதுக்கீடு கோரி பள்ளிக் கல்வி இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்ப வேண்டும்.

V) மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய 2448 பள்ளிகளின் பட்டியலை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு பள்ளிக் கல்வி இயக்குநரால் அனுப்பப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள்,
நகல்
நிதி (கல்வி–II) துறை, சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு.
இ.கோ/உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
9/8/18